[1987 ஏப்ரல் 21]

மின்.சி.சி. ஆசிரியர்கள் பதவி உயர்வு பெறுகிற நேரத்தில்கூட, அதே பள்ளியிலே பணியாற்றுவதற்கு தகுந்த ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நல்ல ஆலோசனை. அதைக் கருத்தில் கொண்டு அரசு அதற்கான தக்க நடவடிக்கையை எடுக்கும்.

திண்டிவனம்-கிடங்கல் ஏரியை மராமத்து செய்தல்.

*435—(*வினா எண் 6662)* **திரு. கே. எம். தங்கமணி:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம்-கிடங்கல் ஏரியின் வரத்து வாய்க்காலை தூர்வாரி ஆழப்படுத்தவும் அகலப்படுத்தவும் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ): திண்டிவனம்-கிடங்கல் ஏரியின் வரத்து வாய்க்காலை தூர்வாரி ஆழப்படுத்தும் மற்றும் அகலப்படுத்தும் பணிகள் அவசியம் ஏற்படும்போது அவ்வப்போது உள்ள நிதி நிலைக்குத் தக்கவாறு மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டம் வறட்சிப் பணியில் தற்போது சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழக ஏழை முஸ்லீம் பெண்களுக்குத் திருமணம் செய்ய வஃப் மூலம் பண உதவி.

*436—(*வினா எண் 9099)* **டாக்டர் த. முகம்மது சலீம்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள ஏழை முஸ்லீம் பெண்களுக்குத் திருமணம் செய்ய வக்ஃப் Wakf மூலம் பணம் உதவி செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?